**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 12.03.2026

அசல் வழக்கு எண்.136/2022

பி.சா. 1 வசந்தகுமாரி, க/பெ.ரவிச்சந்திரன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சொத்து நீங்கள் இரண்டாவது பிரதிவாதிகளிலிருந்து நீங்கள் கிரயம் வாங்கியதாக சொல்கிறீர்கள் என்றால் சரிதான். இரண்டாவது பிரதிவாதி சண்முகம் என்பவரை இந்த வழக்கில் ஒரு சாட்சியாக விசாரணை செய்ய போகிறீர்களா என்றால் விசாரிக்க போகிறேன். வழக்கில் வரைபடம் தாக்கல் செய்துள்ளார்கள் அதனை நீங்கள் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அந்த வரைபடத்தில் எச் என்று குறிப்பிடப்பட்டு இருக்கும் 1193 சதுர அடி நீங்கள் வாங்கினீர்கள் என்றால் சரிதான். அதற்கு புல வரைபடம் ஏதேனும் நீங்கள் வாங்கி தாக்கல் செய்து கொண்டீர்களா என்றால் இல்லை. கிரயம் வாங்குவதற்கு முன்பு எஃப் எம் பி ஸ்கெட்ச் பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் 878/208 என்றால் சரிதான் தாவாசொத்தின் புதிய சர்வே எண் 1726/22 மற்றும் 1726/26 என்றால் சரிதான். மேற்படி இரண்டு சர்வே எண் பட்டா யார் பெயரில் இருக்கிறது என்று தெரியாது. மேற்படி இரண்டு சர்வே எண்ணுக்கும் உங்கள் பெயரில் பட்டா இருக்கிறதா என்றால் இல்லை. இன்றைய தேதியில் யார் பெயரில் பட்டா வருகிறது என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. சண்முகத்தின் அப்பா பெயர் வடிவேல் நாயக்கர் என்றால் சரிதான் வடிவேல் நாயகருக்கு எத்தனை பிள்ளைகள் என்று தெரிந்து கொண்டீர்களா என்று தெரிந்து கொண்டேன். அவருக்கு நான்கு

பிள்ளைகள் ஆவார்கள் வடிவேல் நாயக்கருக்கு சொத்து எவ்வாறு வந்தது என்றால் தெரியாது. வடிவேல் நாய்கருக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து என்று கூறுகிறீர்களா அல்லது தனிப்பட்ட சொத்து என்று கூறுகிறீர்களா என்றால் தனிப்பட்ட சொத்து ஆகும். தனிப்பட்ட சொத்து என்று சொல்கிறீர்கள் அதற்கான பத்திரம் ஏதேனும் நீங்கள் பார்த்தீர்களா என்றால் பத்திரம் பார்க்கவில்லை எங்களுக்கு எழுதிக் கொடுத்ததில் அவரது அண்ணனிடமிருந்து கிரயம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது. வடிவேல் நாய்க்கர் அண்ணன் என்பவரிடமிருந்து வாங்கிய பத்திரத்தை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வடிவேல் நாய்க்கர் அவரது காலத்தில் உயில் எழுதியதாக நீங்கள் சொல்கிறீர்கள் என்றால் சரிதான் அந்த உயில் பத்திரம் நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் டாக்குமெண்ட் நம்பர் 1/1979 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் நீங்கள் ஏற்கனவே பதில் அறிவிப்பு கொடுத்துள்ளீர்கள் அதில் 48/1979 அன்று குறிப்பிட்டுள்ளீர்கள் அதனை தவறாக கொடுத்து விட்டீர்களா என்றால் சரிதான். உயில் முழுவதும் படித்துப் பார்த்தீர்களா அதில் விவரங்கள் தெரிந்து கொண்டீர்களா? தெரிந்து கொண்டேன் படித்து பார்த்தேன் .அந்த உயிலில் சரோஜா அம்மாவுக்கு விற்க உரிமை கிடையாது அனுபவ பாத்தியதை மட்டும் உண்டு என்று சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அவரது காலத்திற்கு பிறகு அவரது பிள்ளைகள் மூவரும் மூன்று பாகமாக பிரித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மூன்று பிள்ளைகள் முறையே கிருஷ்ணன் முருகன் சண்முகம் ஆகிய மூன்று பேரும் சமமாக பிரித்துக் கொள்ள வேண்டும்

என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் .அதன்படி மேற்படி மூவருக்கும் சரோஜா அம்மாள் இறந்த பிறகு மூன்றில் ஒரு பாகம் உண்டு என்று சொன்னால் சரிதான். முந்தைய பத்திரங்கள் ஏதேனும் இருக்கிறதா என்று சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. வடிவேல் நாயக்கருக்கு முதல் மனைவி ராஜம்மாள் என்பவருக்கு பிறந்தவர் பெருமாள் என்றால் சரிதான். மேற்படி கிருஷ்ணன் மற்றும் பெருமாள் ஆகியோர் சண்முகம் என்பவருக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்து விட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள் என்றால் சரிதான். உங்கள் கிரைய பத்திரத்தில் அது சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விடுதலை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன் நீங்கள் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. உயிலின்படி வடிவேல் நாயக்கர் பெருமாள் என்பதற்கு ஏதேனும் பாகம் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை.ஆனால் கிருஷ்ணன் மற்றும் பெருமாள் எழுதிக் கொடுத்த விடுதலைபத்திரப்படி சண்முகம் உரிமையாளர் என்று கருதி நீங்கள் அவரிடம் இருந்து கிரயம் வாங்கி விட்டீர்கள் என்றால் சரிதான் டவுன் பஞ்சாயத்தில் சப் டிவிஷன் செய்து சொத்துக்கு பிளான் அப்ரூவல் வாங்கினீர்களா என்றால் வாங்கவில்லை. நீங்கள் உங்கள் பெயரில் சப் டிவிஷன் செய்து பட்டா வாங்கினீர்களா என்றால் இல்லை. நீங்கள் சொன்ன சங்கதிகள் வைத்து தான் பதில் உரை தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். உங்களுடைய பதில் உரையில் வழக்கு சொத்து கிருஷ்ணன் மற்றும் முருகன் என்பவருக்கு சொந்தமான சொத்து என்று சொல்லி இருக்கிறீர்கள் என்றால் சரிதான். முருகன் என்பவரிடமிருந்து சண்முகம்

மூன்றில் ஒரு பாகம் விடுதலை பத்திரம் எழுதவில்லை என்றால் சரிதான். முருகன் என்பவருக்கு மூன்றில் ஒரு பாகம் சொத்து உண்டு என்று சொன்னால் சரிதான். முருகன் என்பவரிடமிருந்து நீங்கள் விடுதலை பத்திரம் வாங்காத நிலையில் சொத்தை வாங்கியதால் அவருக்கு சொந்தமான மூன்றில் ஒரு பாகம் நீங்கள் கிரயம் வாங்கவில்லை நீங்கள் இரண்டு பாகம் மட்டுமே கிரயம் வாங்கி உள்ளீர்கள் என்றால் சரியில்லை வாதி முருகனுக்கு மூன்றில் ஒரு பாகம் சொத்தில் உரிமை உண்டு ஆகவே நீங்கள் அதனை அவருக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. நீங்கள் முருகன் என்பவரிடமிருந்து அவரது பாகத்தை வாங்கவில்லை இப்போது நீங்கள் வாங்க தயாராக இருக்கிறீர்களா என்றால் வாங்க தயாராக இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram